# புதுமை இலக்கியம்

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க வெளியீடு

'PUTUHMAL ILAKKIYAM' Organ of the Ceylon Progressive Writers Asso.

## உள்ளே

அலக்ஸாண்டர் பெடபேல்

கா. சிவத்தம்பி

இளங்கீரன்

எஸ். ராமகிருஷ்ணன்

சி. சு. செல்லப்பா

முகம்மது சமீம்

பிப்ரவரி 1962
வெளியீடு 12

சதம் 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாராகிறது

# மகாநாட்டு மலர்

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் அண்மையில் நடத்த விருக்கும் அகில இலங்கைத் தமிழ் எழுத்தாளர் மகாநாட்டை ஒட்டிய ''புதுமை இலக்கிய'' மகாநாட்டு மலர் வேலைகள் பூர்த்தியடைகின்றன.

## இந்த மலரில்

நாட்டுக் கூத்து சிற்பம், மேடை நாடகம், ஈழத்தின் முஸ்லிம் புலவர்கள், நமது இலக்கியப் பாரம்பரியம், சிறுகதை இலக்கியம், நாவல் இலக்கியம், கிராமிய இலக்கியம், மலை நாட்டு இலக்கியம், நமது இலக்கியப் பிரச்சினைகள், நம் நாட்டுப் பத்திரிகைகள், முற்போக்கு இலக்கியம், பிற மொழி இலக்கியத்திற்கு தமிழர் தொண்டு, எழுத்தாளன்—வாசகன், கவிதை இலக்கியம், கட்டுரை இலக்கியம், நமது எழுத்து, குழந்தை இலக்கியம், வரலாற்று நூலாசிரியர்கள் பழந்தமிழ் இலக்கியத்திற்கு ஈழத்தின் தொண்டு, சிங்கள இலக்கியப் பார்வைத்தனைகள், நூல் நிலையங்கள், விளம்பரக்கலை, ஈழத்தில் தமிழிலக்கியத் தொண்டாற்றும் முஸ்லிம்கள், மலைநாட்டு நாட்டுப் பாடல்கள், சிங்கள இலக்கியத்தின் வளர்ச்சி, இன்பத் தமிழ், திறனாய்வு முதலிய ஈழத்து கலை இலக்கிய வளர்ச்சியை கோடிட்டுக் காட்டும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளிவருகின்றன.

உங்கள் பிரதிகளுக்கு இப்போதே எழுதி

உத்தரவாதப்படுத்திக் கொள்ளுங்கள்.

விபரங்களுக்கு:-

புதுமை இலக்கியம்

26, சென்ற் அந்தோனி மாவத்தை

கொழும்பு-13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம்

# கலைத் துறையில்

# புதிய திருப்பம் காண்போம்

இலக்கியத்தைப் போலவே மனித நாகரிகத்தின் வளர்ச்சியிலும், மனித இன ஆத்மீகவளத்தின் செழிப்பிலும், மனித சமுதாயத்தின் முன்னேற்றத்திலும் கலையும் மகத்தான தொரு பாத்திரம் வகிக்கிறது.

மனித சமுதாயத்தின், மனிதப்பண்பாட்டில் மகோன்னதமான ஆத்மீகவெளிப்பாட்டுக் கருவிகளில் ஒன்ருகத்திகழும் கலை; அதேவேளையில் புதிய பண்பாட்டையும், புதிய சமுதாயத்தையும் உருவாக்க மக்கள் கையில் வலுமிக்க ஆயுதமாகவும் விளங்குகிறது.

மனிதனது சிருஷ்டிகளான சகல பௌதீக, ஆத்மீக சாதனங்களையும் போலவே, அந்த சிருஷ்டிகளிலொன்ருன கலையும் மனிதனது நல்வாழ்வுக்கும், முன்னேற்றந்திற்கும், ஆனந்தத்திற்குமான தாம யுத்தத்தில் மனிதனுக்காகப் பயன் படவேண்டும்.

சமுதாயம் வீழ்ந்துபடும்போது, பண்பாடு வீழ்ச்சியுறும் போது அதன் பிரதிபிம்பமான கலை தனித்து சிறப்புற்று நிற்க முடியாது. கலையின் முன்னேற்றம் சமுதாயத்தின், மனிதனின் முன்னேற்றத்துடன் பின்னிப் பிணைந்து கிடக்கிறது. கலைமுன்னேற வேண்டுமானுல் சமுதாயம் முன்னேற வேண்டும். ஆகவே தான் உண்மைக் கலை மக்கள் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கான போராட்டத்தில் மக்களோடு அணிவகுத்து முன்னடக்கிறது.

ஆனுல் நம் நாட்டைப் பொறுத்தமட்டில் கலை அதன் தேசிய, சமுதாயக் கடமைகளை நிறைவேற்றுவதாக இல்லை. உருவத்திலும், உள்ளடக்கத்திலும் அது பின்னிற்கிறது. இலக்கியத் துறையில் இந்த நாட்டு எழுத்தாளர்கள் மத்தியில் தோன்றியுள்ள புத்துணர்ச்சியும், புதிய விழிப்பும், புதிய பார்வையும் கலையைப் பொறுத்தமட்டில் நமது கலைஞர்களுக்கு மத்தியில் ஸ்தூலமாகத் தோன்றவில்லை என்றே கூறவேண்டும்.

இந்தக் குறையை நீக்கவும், கலைத்துறையில் லட்சிய முரசம் அறையவும், ஈழத்துக் கலைக்கு சரியான தேசிய — ஜனநாயக அர்த்தபாவத்தை ஊட்டவும், கலையினதும் கலைஞர்களினதும் சமுதாயப் பாத்திரத்தை வரையறுத்து வழிநடத்தவும், நமது நாட்டின்தேசிய மரபில் இழைந்து, ஜனநாயக உயிரோட்டம் பெற்ற புதிய மக்கள் கலையை உருவாக்கவும் இ. மு. எ. ச. முன்முயற்சியால் நமது சகோதர ஸ்தாபனமாக மக்கள் கலைப் பெருமன்றம் உதயமாகியுள்ளது.

இந்த ஸ்தாபனம் ஜனநாயகக் கருத்தோட்டமுள்ள சகல முற்போக்குக் கலைஞர்களையும், கலைஞர்களின் அமைப்புக்களையும் ஒன்று படுத்தி மக்கள்கலை வளர்க்கச் செயலாற்றும்.

கலையார்வம் மிக்க சகல கலைஞர்களையும், மக்கள் பணியையே தமது கலைப் பணியாகக் கொண்ட சகல உண்மைக் கலைஞர்களையும் இந்த ஸ்தாபனத்தில் சேருமாறு அறைகூவி அழைக்கிறோம்.

கலையின் வளர்ச்சியில் எழுத்தாளர்களுக்கும் மகத்தான பொறுப்புள்ளது, கலைக்கு புதிய, ஜனநாயக உள்ளடக்கம் அளிக்கும் கடமை எழுத்தாளனையே சாரும். கலைஞர்களுடன் நேரடியான உறவு கொள்ளுமாறும், கலைவளர்ச்சியில் தீவிரமாக ஈடுபடுமாறும், புதிய சமுதாயப் பார்வையுள்ள நாடகங்களையும், இசை நாட்டியங்களையும், பாடல்களையும், இயற்றி கலை உலகுக்கு அர்ப்பாணிக்குமாறும் எழுத்தாளர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

## கலைப்புலவர்

இ. மு. எ. ச. தலைமைக்குழு நிறைவேற்றிய தீர்மானம்;

''கலைப் புலவர் நவரத்தினம் காலமானது பெரும் நஸ்டமாகும் கலை, இலக்கியத் துறைகளில் நற்பணியாற்றிய அன்னரது ஞாபகார்த்தத்திற்கு எமது வணக்கத்தைச் செலுத்துகிறோம் அவரது குடும்பத்தினருக்கும், இலக்கிய நண்பர்களுக்கும் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திலெப்பை

முஹம்மது சமீம். B. A. (Hons)

இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றிலே சித்திலெப்பையின் பெயர் பொன்னேடுகளில் பொறிக்கப்படத்தக்கது. பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதிப்பகுதியில் வாழ்ந்த இவர் முஸ்லிம் சமுதாயம் விறுபெற்று எழுச்சியுறுவதற்குக் காரணமாயிருந்தார். சித்திலெப்பையின் சேவையைப் பற்றி அறிவதற்கு முன்னர் அவர் வாழ்ந்த காலத்தின் சூழ்நிலையையும் அன்று நடந்த போராட்டங்களையும், அறியவேண்டியது அவசியமாகிறது.

நிலமான்ய அரசியல் முறையில் ஊறித் திளைத்துப் போயிருந்த இலங்கை மக்களின் வாழ்க்கை ஐரோப்பியரின் வருகையினுல் பெருமளவில் பாதிக்கப்பட்டது. இலங்கையின் அரசியல் அமைப்பு, அரசியற்சட்டங்கள், பொருளாதாரம், சமூக வாழ்வு, இவையெல்லாம் இப்பிரபுத்துவ ஆட்சிமுறையின் அடிப்படையிலிருந்து எழுந்தவையே.

வாணிபத்தில் ஈடுபட்ட ஐரோப்பியர் காலகதியில் ஏகாதிபத்தியவாதிகளாக மாறினர் அவர்களது எதேச்சாதிகாரம் உலகம் முழுவதும் தலை விரித்தாடத்தொடங்கியது. நிறவேற்றுமையும் தலைதூக்க ஆரம்பித்தது. 'கறுப்பு மனிதனின் முன்னேற்றம் வெள்ளையனின் கடமை' என்ற போலித்தத்துவம் பேசி, அடக்கு முறை ஆட்சியைக்கைக் கொண்டனர்.

இவர்களது அதிகாரப் பிடியில் நலிந்து அவஸ்தைப்பட்ட. நாடுகளில் இலங்கையும் ஒன்று. போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகிய இம் மூன்று நாட்டவரும் ஒருவர் பின் ஒருவராக இலங்கையை ஆண்டனர். பத்தொன்பதாம் நூற்றுண்டில் ஆங்கிலேயரின் ஆட்சி ஆரம்பமாகிறது. தனியரசு செலுத்திக்கொண்டிருந்த கண்டி இராஜதானியும் அவர்கள் கைவசம் வருகிறது. இலங்கை முழுவதையும் ஆளத்தொடங்கிய ஆங்கிலேயர் தங்கள் நாட்டின் நடை முறைகளை இலங்கை மக்களின் மேல் திணிக்கத் தொடங்கினர். இப்படித் திணிக்கப்பட்டவைகளில் தேசாதிபதியும், அவரது சட்ட நிருபண சபையும் ஒன்று.

கோல்புருக் பிரபுவின் திட்டத்தின் படி, இலங்கை அரசியல் நிர்வாகத்தில், தேசாதிபதிக்கு ஆலோசனை கூறுவதற்காக ஒரு சபை நியமிக்கப்பட்டது. இந்தச் சபையில் இலங்கையின் பூர்வீகக் குடிகளான சிங்களவருக்கும், தமிழர்களுக்கும் இரண்டு ஸ்தானங்கள் கொடுக்கப்பட்டன. பொருளாதாரத் துறையிலும், சமூக வாழ்விலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன இலங்கையின் மலை நாடுகளெல்லாம், தேயிலை ரப்பர் தோட்டங்களாக மாறின ஆயிரக்கணக்கான கூலியாட்கள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டனர். பிரபுத்துவ ஆட்சிமுறையின் அடிப்படையில் வாழ்ந்துவந்த மலைநாட்டுச் சிங்கள மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டனர். தலை முறை தலை முறையாகச் சுதந்திரம் கொண்டாடி, கமத்தொழில் செய்து வந்த நிலம் பலவந்தமாக அபகரிக்கப்பட்டதை உணர்ந்தார்கள் இந்நாட்டின் செழிப்பான நிலங்களை, இங்கிலாந்திலிருந்து வந்த முதலாளிகளுக்குத் தானமாகக் கொடுத்தது, இலங்கையின் ஆங்கிலேய அரசாங்கம். ஆயிரக்கணக்கான வருடங்களாக வாழ்ந்துவந்த இந்நாட்டு மக்கள் தங்கள் சொந்த நிலங்களிலிருந்து அகற்றப்பட்டனர். ஆங்கில ஏகாதிபத்திய அரசாங்கத்தின் சுரண்டல் காள்கையினுல், இலங்கை மக்கள் வாடி, வதங்கி, மனஉறுதி இழந்து அடிமைகளைப் போல் வாழத் தலைப்பட்டனர். நானூறு வருடங்களாக ஐரோப்பியர்களின் எதேச்சாதிகாரத்தை எதிர்த்து சுதந்திரப் போர் புரிந்த கண்டிமக்கள், சுதந்திரம் இழந்து, உரிமையற்று மலைநாட்டின் வறண்ட பிரதேசங்களில் ஒதுங்கிவாழத் தொடங்கினர்.

இவர்கள் ஆதிக்கம் பொருளாதாரத் துறையோடு மாத்திரம் நிற்கவில்லை. அவர்களது ஆதிக்கவெறி சமுதாயத்தின் ஆணிவேராகிய மதத்தையும், கலாசாரத்தையும் பாதிக்கத்தொடங்கியது. ஆங்கிலேயரின் அடக்குமுறை ஆட்சியை இதுவரையில் பொறுத்துக் கொண்டிருந்த இலங்கை மக்கள், தங்கள் வாழ்வின் அஸ்திவாரமாகிய மதநம்பிக்கையையே பாழ்படுத்த முயலும் ஆட்சியாளரை எதிர்க்கத்தயங்கவில்லை.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் இங்கிலாந்தின் சாம்ராஜ்யம் உலக முழுவதும் வியாபித்திருந்தது. ஆங்கில ஏகாதிபத்திய வாதிகளின் குரல் மேலோங்கியிருந்த காலம் அது இந்தச் காலகட்டத்திற்றுன். இலங்கையின் பூர்வீகக்குடிகளான, பௌத்த, இந்து, இஸ்லாமிய சமூகங்களின், தனித்தன்மையைக் காப்பாற்ற,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று வீர புருஷர்கள் தோன்றினார்கள். அனகாரிக தர்மபாலாவும், ஆறுமுகநாவலரும் சித்திலெப்பையும் தங்கள் அயராத உழைப்பினால் தங்கள் சமூகங்களுக்குப் புத்துயிர் அளித்து புதுப்பாதையில் இட்டுச் சென்றார்கள்.

அன்றிருந்த இலங்கையின் கல்விநிலை, ஆங்கில சாம்ராஜ்யத்திற்குப் பணிபுரியும் ஊழியர்களைத்தான் உருவாக்கிக்கொண்டிருந்தது. அத்தோடு பௌத்த, இந்து, முஸ்லிம் குழந்தைகளுக்குப் பலவந்தமாகக் கிறிஸ்தவம் கற்றுக்கொடுக்கப்பட்டது. தங்கள் சமயத்தைச் சார்ந்த ஓர் ஐந்தாம்படையொன்றை நிறுவுவதும் ஆங்கில ஏகாதிபத்திய அரசாங்கத்தின் முக்கிய கொள்கைகளில் ஒன்றாயிருந்தது. இலங்கையர்களைக் கிறிஸ்தவர்களாக்கினால் தங்கள் ஆட்சியை அவர்கள் எதிர்க்கமாட்டார்கள் என்ற நப்பாசையில், ஏகாதிபத்திய வாதிகள், தங்கள் சமயத்தை இலங்கை மக்களின் மீது திணிக்க முயன்றனர். பெரிய கல்வி ஸ்தாபனங்கள் யாவும் கிறிஸ்தவ மிஷன்களின் கீழ் இருந்தன. அரசாங்க ஆதரவும் இவர்களுக்குக் கிடைத்தது. புத்த சமயத்தவரும், இந்து மதத்தினரும் தங்களுக்கென்று ஓர் கல்வி ஸ்தாபனம் இல்லையே என்று ஏங்கிக் கொண்டிருந்த காலத்தில் இந்துக்களிடையே ஆறுமுகநாவலரும் பௌத்தர்களிடையே அனகாரிக தர்மபாலாவும் தோன்றியும் தங்கள் சமூகத்தைச் சீர் திருத்தப்பெரிதும் பாடுபட்டனர். ஆறுமுகநாவலரின் விடாமுயற்சியால் யாழ்ப்பாணத்தில் 'இந்துக் கல்லூரியும்' அனகாரிக தர்மபாலா போன்றவர்களின் உழைப்பினால் கொழும்பில் ஆனந்தா கல்லூரியும் ஸ்தாபிக்கப்பட்டன. இவ்விரு சமூகங்கள் முன்னேறுவதற்கு இக்கல்வி ஸ்தாபனங்கள் பெரிதும் உதவின. இவர்களுடைய ஆர்வம் சித்திலெப்பையைப் பெரிதும் கவர்ந்தது.

கல்விக்கே இருப்பிடமாயமைந்த முஸ்லிம்கள் அறியாமை யென்னும் இருளுக்குள்ளேயே பதுங்கிக் கிடந்தனர். இலங்கை முஸ்லிம்களின் கல்வி நிலை மிகவும் மோசமாயிருந்தது. 'முஸ்லிம் நேசன்' என்ற தனது பத்திரிகையின் மூலம் முஸ்லிம்களின் இந்த பரிதாப நிலையை மாற்ற முயற்சித்தார் சித்திலெப்பை கல்வியின் அவசியத்தையும் அதன் முக்கியத்துவத்தையும் அடிக்கடி தன் பத்திரிகையில் எழுதினார். ஆங்கிலக் கல்விமீது ஒருவித வெறுப்புக் கொண்டிருந்தனர் முஸ்லிம்கள். 'ஆங்கிலம் காபிரீன்களின் மொழி;' ஆகையால் அதைக் கற்பது ஹறாம் அதைக் கற்றால் ஒரு மூமின் 'காபிராகி விடுவான்' என்று விவாதித்தனர் சிலர். கல்வியறிவேயில்லாத பெரும்பான்மையான முஸ்லிம்களும் இதை நம்பினர். சமூகம் முன்னேற வேண்டுமானால் அவர்களிடையே இருக்கும் இந்த மனப்பான்மை மாறவேண்டும் என்று அல்லும் பகலும் உழைத்தார் சித்திலெப்பை. முஸ்லிம்களின் இந்த மனப்பான்மையைத் தனது 'முஸ்லிம் நேசன்' என்ற பத்திரிகையின் மூலம் மாற்றினார். அவரது சலியாத உழைப்பினால் கொழும்பில் முஸ்லிம்களுக்கென 'ஸாஹிராக் கல்லூரி' ஸ்தாபிக்கப்பட்டது. இது பிற்காலத்தில் இலங்கை முஸ்லிம்களின் கல்வியின் இருதய பீடமாக அமைந்தது என்றால் மிகையாகாது.

ஜனாப் சித்திலெப்பை 1838-ம் ஆண்டில் கண்டிமா நகரில் பிறந்தார். அவருடைய மூதாதையர் அரபு நாட்டிலிருந்து வியாபாரம் காரணமாக இலங்கைக்குவந்து குடியேறியவர்களில் ஒருவர் காலக்கிரமத்தில் குடும்பம் கண்டியில் குடியேறியது.

கல்வியறிவு குறைந்த அந்தக் காலத்தில் அரபு, தமிழ், ஆங்கிலம், ஆகிய இம் மூன்று மொழிகளையும் நன்றாகப் பயின்று வழக்கறிஞரானார் சித்திலெப்பை வழக்கறிஞராயிருந்தாலும், பொதுசன சேவையில் ஈடுபட்டார்.

முஸ்லிம்களிடையே கல்வியறிவு பரவினாலொழிய அவர்கள் பிற சமூகத்தினரைப் போல் முன்னேற முடியாது என்பதையும் பிரசாரத்தின் மூலம்தான் தனது கொள்கைகளைப் பரப்ப முடியும்என்பதையும் உணர்ந்த அவர், ஒரு பத்திரிகையைத் தொடங்கினார். அதுதான் "முஸ்லிம் நேசன்." இதுவே இலங்கை முஸ்லிம்களின் முதற் பத்திரிகை, இலங்கை முஸ்லிம்களின் முதல் உரிமைக் குரல் என்றாலும் பொருந்தும்.

அன்றைய சட்டசபையின் ஊழல்களைத் தாக்கத் தயங்கவில்லை "முஸ்லிம் நேசன்." சட்டசபையில் முஸ்லிம்களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லாததைக் குறித்து ஆங்கில ஏகாதிபத்திய அரசாங்கத்தைக் கண்டித்தது "முஸ்லிம்நேசன்". சட்டசபையில் ஆங்கிலேயருக்கும் பறங்கியருக்கும் இடமிருந்தது. ஆனால் இரண்டு இலட்சம் முஸ்லிம்களுக்கு இந்தச் சபையில் இடம் இருக்கவில்லை. சிறுபான்மை மக்களாகிய முஸ்லிம்களுக்கு அரசாங்கம் இழைத்த அநீதியை எடுத்துக் காட்டினார் சித்திலெப்பை. அரசியல் துறையில் நடத்திய போராட்டம் வீண்போகவில்லை. இலங்கை முஸ்லிம்கள் அத்தனைபேரின் மனதிலும் குமுறிக் கொண்டிருந்த அமைதியின்மையையும், சுதந்திர தாகத்தையும், சித்திலெப்பையின் முஸ்லிம் நேசன் பிரதிபலித்தது. அரசாங்கமும் முஸ்லிம்களின் கோரிக்கைக்கும் செவிசாய்த்தது. ஆகவே 1889ம் ஆண்டில் சட்டசபையில் முதன் முதலாக ஒரு முஸ்லிம் பிரதிநிதி அங்கத்துவம் வகித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கியத்தின் பணி

**இலக்கியம் என்றால் என்ன?**

அது வாழ்க்கையின் எதிரொலி. எழிலும், இனிமையும், கற்பனையும் நிறைந்த எதிரொலி.

**இலக்கியத்தின் நோக்கம் என்ன?**

இலக்கியம் வாழ்க்கையின் எதிரொலி என்று கூறும் போதே அதனுடைய நோக்கமும் தெளிவாய்த் தெரிந்து விடுகிறது. எனினும் சிறிது விளக்கமாகச் சொன்னால் சென்றகால், நிகழ்கால வாழ்க்கையைக் கலை மெருகுடனும், கற்பனைச் செறிவுடனும் சித்திரிப்பது. விமர்சிப்பது, வளமான வருங்காலத்தைச் சிருஷ்டிக்கத் தூண்டுவது. ஆகியவற்றைச் செய்வதுதான் இலக்கியத்தின் நோக்கம்.

**இலக்கியத்திற்கும் மொழிக்கும் உள்ள சம்பந்தம் என்ன?**

வாழ்க்கையின் பரிணும வளர்ச்சியின் விளைவால் உருவான சாதனம் மொழி. வேறு முறையில் சொன்னால் வாழ்க்கையிலிருந்து பிறந்தது இலக்கியம். அதாவது இலக்கியத்தை உருவாக்கும் முதல் சாதனம், முக்கிய சாதனம் மொழி. ஆனால் இலக்கியச் சேர்மானங்களை மொழி உருவாக்குவதில்லை. அவற்றை அதாவது கருத்து, நிகழ்ச்சி, உணர்ச்சி ஆகியவற்றை உருவாக்கிக் கொடுக்கிறது. மொழி இவற்றை ஒன்று சேர்த்து கலை வடிவமாக்குகிறது. இலக்கிய உருவமாக்குகிறது. இதிலிருந்து மொழிக்கும் இலக்கியத்திற்கு முள்ள தொடர்பு தெளிவாகி விடுகிறது.

**இலக்கியம் மொழியை வளம்படுத்த வேண்டுமா? வாழ்க்கையை வளர்ப்படுத்த வேண்டுமா?**

---

மூன்றாம் பக்க தொடர்ச்சி

இருபதாம் நூற்றாண்டில் முஸ்லிம்களிடையே தோன்றிய மறுமலர்ச்சி இயக்கத்தின் முன்னோடியாகத் திகழ்ந்தார் சித்தி லெப்பை. ஆங்கில ஏகாதிபத்திய வாதிகளை எதிர்த்துத் தனது சமூகத்திற்கு உரிமை வாங்கிக் கொடுத்தார். வியாபாரத்தில் மட்டும் ஈடுபட்டிருந்த முஸ்லிம்களைக் கல்வியிலும் ஈடுபடச் செய்தார். வெறும் வணிகர்களாயும், ஏழைக் கமக்காரர்களாயும் இருந்த முஸ்லிம்கள் மத்தியில். கல்வியையே மூலதனமாகக் கொண்ட ஒரு மத்திய வகுப்பினர் தோன்றுவதற்கு காரணமாயிருந்தவரும் சித்தி லெப்பையே அடக்கு முறை ஆட்சியையும், பிற்போக்கு வாதிகளின் திட்டங்களையும் எதிர்த்து நின்று அன்றைய சமுதாயத்தின் முற்போக்கு சக்திகளை வழிநடத்திச் சென்றவர்களில் சித்திலெப்பையும் ஒருவர்.

மொழி வாழ்க்கையில் ஒரு அம்சம். இலக்கியம் வாழ்க்கை முழுவதையும் தழுவி நிற்பதால் அதன் முழு அம்சமாக இருக்கிறது. எனவே, அதனுடைய முதல் நோக்கம் வாழ்க்கையை வளம்படுத்துவதுதான். மொழியை வளம்படுத்துவது இலக்கியத்தின் இரண்டாவது நோக்கம். சுருக்கத்தில் இலக்கியம் மனிதனுக்காக, அவனுடைய வாழ்க்கைக்காக அவன் பேசும் மொழிக்காக இருக்க வேண்டும். இந்த மூன்று அம்சங்களையும் ஒன்றுக் கொன்று முரண்படாத வகையில் பூரணத்துவத்திற்கு அழைத்துச் செல்வது தான் இலக்கியத்தின் பணி.

**இளங்கீரன்**

## இலக்கியமும் சித்தாந்தமும்

இலக்கிய அபிப்பிராயங்களை எடுத்துச் சொல்வதில் சிறப்புக்களை மட்டும் எடுத்துச் சொல்வதுடன் நின்றுவிடுவதுஒருவகை குறைகளைச்சேர்த்துச் சொல்வது மற்றொரு வகை குறைகளை மட்டும் எடுத்துச் சொல்வது மூன்றாவது வகை. இந்த மூன்றில், முதலாவது பாராட்டாக நின்று விடுவது. மூன்றாவது கண்டனமாக மிஞ்சுவது. இரண்டும் விமர்சனம் அல்லது திறனாய்வு என்ற ஆராய்ச்சி எல்லைக்கு அப்பாலேயே நின்று விடுபவை. நடுவகையான நிறை குறை இரண்டையும் எடுத்துக் காட்டும் ஒரு கருத்து ஓட்டப் போக்கே விமர்சனம் ஆகும். வெறும் கொடூரமும், கசப்பும் காட்டி இலக்கியத்தை வளர்த்து விட முடியாது இதுவரையுள்ள இலக்கிய சரித்திரம் அதை நிரூபித்திருக்கிறது. புகழ்ச்சியும் இகழ்ச்சியும் அதுக்காக ஒரு அந்தஸ்து கொண்டு எந்த ஒரு இலக்கிய வடிவத்தின் ஸ்தானத்தையும் நிரந்தரமாகக் காப்பாற்றியோ, அழித்தோ கொடுத்ததில்லை.

ஒரு இலக்கிய உருவம் எதனால் நன்றாக இருக்கிறது. இல்லை என்று அந்த நூலில் அமைந்த குணம் குறைகளைக் கொண்டே விளக்கிப் பார்ப்பதுதான் நல்லது — கெட்டது பிரிக்கவும் சிறப்பு சிறுமை அறியவும் ஏதுவாக இருக்கும். அதுமட்டுமல்ல, இலக்கியப் படைப்புக்கான இலக்கண, லட்சண மரபு மூன்று காலத்தையும் ஊடுருவிச் செல்லும் இழையோட்டமாக நீண்டு செல்வதையும் பார்க்க முடியும்.

கலைகளுக்கும் சித்தாந்தங்களுக்கும் உள்ள உறவு மறுக்க முடியாதது. அது எந்த அளவுக்கு இருக்கும் என்பதைப் பொறுத்துத்தான் வாதப்பிரதி வாதங்கள் நடைபெற்றுவருகின்றன. கலை உருவங்களை ரஸித்து கோட்பாடு பற்றிய வித்தியாசங்களைப் போக்கிக் கொள்ளக் கூடும். கோட்பாடுகளை எடுத்துக் கொண்டு கலை உருவத்தை விளக்கி ஆதாரம் காட்டி கலை உருவத்தின் மதிப்பை அறியச் செய்ய முடியும். கலைகள் பல்வேறுபட்ட சித்தாந்தங்களுக்குக் களமாக அமைந்துள்ளன என்பது இன்று நாம் பார்க்கிற விஷயம். அதை நினைவிலிருந்து ஒதுக்கி விட்டு நாம் ஒரு இலக்கிய நூலை அணுகமுடியாது. ஆனால் அவ்விதம்பார்ப்பதில் சில எச்சரிக்கைகளை மனதில் கொள்ளவும் வேண்டும்.

**சி. சு. செல்லப்பா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தாளனின் சமுதாயத் தன்மை

**எஸ். ராமகிருஷ்ணன்**

எழுத்தாளன் மேக மண்டலத்தில் சஞ்சரிக்கும் அதீத கற்பனைவாதியாகவோ, பூமியிலேயே கட்டுண்டு கிடக்கும் மொட்டையான யதார்த்தவாதியாகவோ இருக்கக் கூடாது. நல்லறங்களது அச்சுப் பாத்திரங்களைப் படைத்து நடமாடவிடும் 'பாவைக் கூத்து'ச் சூத்திரதாரியாகவும் இருக்கக் கூடாது. எழுத்தாளனின் மனோபாவனை சமுதாய வாழ்வில் வேரூன்றிச் செயல்படத் தயாராயிருக்கவேண்டும்.

தனிமனித உண்மை (**Fact**) வேறு. முழு யதார்த்தம், சத்தியம் (**Truth**) வேறு.

எழுத்தாளன் வாழ்வை முழுமையாக அறிய முற்படல் வேண்டும். வாழ்வின் மாறுதல் விதிகளை அறியவேண்டும். சமுதாயத்தில் சில அம்சங்கள் தேய்வுற்று அழிவதையும் சில அம்சங்கள் வளர்வதையும் பற்றி விஞ்ஞானரீதியான அறிவைப் பெறவேண்டும். அப்போதுதான் எதிர்காலத்தைப்பற்றிய தெளிவுடன் லட்சிய ஒளி வீசும் மனோபாவனையைப் பெறமுடியும். அவன் தான் சோஷலிஸ்ட் யதார்த்தவாதி.

உலகப் புகழ்பெற்ற நவீனங்களில் அதீத கற்பனைவாதிகளால் எழுதப்பட்டவை உள்ளன. அந்த இலக்கிய கர்த்தாக்கள் மகத்தான தார்மீக லட்சியங்களால் உந்தப்பட்டார்கள். சிறகு கட்டிப் பறந்தார்கள். ஆனால் அவர்களது படைப்புக்களில் சரித்திர உண்மையின் சாரம் இடம்பெறவில்லை.

பிரசித்திபெற்ற யதார்த்தவாத நாவலாசிரியர்கள் மக்களின் துன்ப துயரங்களை, இன்மையால் வடிக்கும் கண்ணீரை, போரால் வடிக்கும் செந்நீரை, அச்சமும், அவலமும், சினமும், செருக்கும், பொறாமையும், பொல்லாங்கும் மக்களைப் படுத்தி வைக்கும் பாட்டைச் சித்தரித்துப் புகழ் பெற்றுள்ளனர். ஆனால் எதிர்காலத்தைக் குறித்து நம்பிக்கை ஒளிவீசி மக்களைச் செயலுக்குத் தூண்டுவனவாக அவர்கள் இயற்றிய நாவல்கள் அமையவில்லை.

சோஷலிஸ்ட் யதார்த்தவாதம் சமுதாய உண்மையை அடிச்சரடாகக் கொண்டிருக்க வேண்டும். அதே பொழுதில், கம்பீரமான கனவை நனவாக்குவதற்காக மகோன்னதமான பணிபுரிய மக்களின் உள்ளத்தைக் கிளர்ந்தெழச் செய்கிறது. தார்மீக இலட்சியமும், யதார்த்த உண்மையும் இணை பிரியா இரட்டையராக ஐக்கியப்படல் வேண்டும்.

இலக்கியம் வாழ்வின் அழகை உணர்த்தும் நுண்கலை என்பர். அது உரிய இடங்களில் இயற்கையின் எழிலைச் சுவையுடன் சித்தரிப்பதுடன் கதைப்பொருளை விண்டுகாட்டுவதிலும் பாத்திரங்களைப் படைத்துக் காட்டும் தன்மையிலும் தான் வெற்றிக்கு அடிகோல முடியும். மனிதப் பண்புகளே உயிர்ப்பாத்திரங்களின் மூலம் நம் உள்ளத்தைப் பிணிக்கின்றன. எனவேதான், பெருமைசால் நவீனங்கள் மனிதப் பண்புக்கு உரியனவாக உள்ளன. அன்னையின் பெயர் புனிதமானதென்றும், சகோதரப் பாசம் சிறப்பானதென்றும், சிநேகதர்மம் மனிதனுக்கு உயர்வு தருகிறதென்றும், தூய காதல் எழில்மிக்கதென்றும் நாம் அறிவோம். அவற்றுடன் நாட்டுப்பற்றும், பொதுநலத் தொண்டும், விவேகத்தின்பாற்பட்ட வீரமும், சமாதான வேட்கையும், சர்வதேச சௌஜன்ய நாட்டமும் உன்னதமான மனிதப்பண்புகளாகத் திகழ்கின்றன.

கதை—மனிதாபிமானக் கண்கொண்டு மக்களது கஷ்டங்களைக் கண்டு கண்ணீர் வடிப்பதுடன், தீமைகளைக் கண்டு தார்மீகக் கண்டனம் செய்வதுடன் ஒடுங்கிவிடவில்லை. சமுதாய முன்னேற்றத்தைச் சாதிக்கும் வகையில் பாடுபடும் மக்களைத் திரட்டும் இலக்கியப் பிரகடனமாகவும் இது விளங்க வேண்டும். கெட்டதை அழிக்காமல் நல்லது நிலைகொள்ள முடியாது என்ற கருத்து கதையில் புதைந்து கிடக்க வேண்டும்.

---


**புதுமை இலக்கியம்**

பிரதி — சதம் —25
வருட சந்தா — ரூபா 3—00

உங்கள் சந்தாக்களை அனுப்புங்கள்.
உங்கள் இலக்கிய நண்பர்களைச்சந்தாதாரர்களாகச் சேர்த்து உதவுங்கள்

பொறுப்பாசிரியர்,

**புதுமை இலக்கியம்**

26, சென்ற். அந்தோனி மாவத்தை,
கொழும்பு—13.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோஷலிஸ யதார்த்தம்

## அலெக்ஸாண்டர் பெடயேவ்

"மனிதன்! இந்தவார்த்தையே எவ்வளவு கம்பீரமாக ஒலிக்கிறது" என்று கார்க்கி கூறினார். அதை சோஷலிஸ்ட் இலக்கியம் நிதர்சனமாக்குகிறது.

சோஷலிஸ்ட் இலக்கியம் உண்மையான மனிதத்துவத்திற்கு ஜீவனை அளித்து அதன் உயரியபண்புகளைப் பேணி வளர்க்கிறது. தேசபக்தியும, மக்களுக்குள் தோழமை உணர்வும் மனிதகுலத்தின் மகத்தான உணர்ச்சித் துடிப்புகள் என்றும் காதல் உணர்ச்சி தூய்மை நிறைந்து எழில் ததும்புவது என்றும், உண்மையான நட்பு தன்னலம் மற்றது என்றும், 'அன்னை' என்ற சொல் புனிதமானதென்று ... ழைப்பதற்கும் படைப்பதற்கும் மனிதன் ...ழ்க்கையைப் பெற்றிருக்கிறான் என்றும் சோஷலிஸ்ட் இலக்கியம் நமக்குக் கற்பிககிற...

பழமை...யான மனிதத்துவம் (OLD HUMANISM) எவ்வளவு மகத்துவம் வாய்ந்ததாக இ...நாலும் கூட அதில் முக்கியமாக இரண்டு ...றைகள் இருந்தன. 'நன்மை' வெற்றிபெ...றுவதற்கு 'தீமை' அழிக்கப்படவேண்டும் ...ன்பதை அது புரிந்து கொள்ளத் தவறிவிட்...து தவிரவும் இவ்வுலகில் மனிதனின் ஸ்தானத்தை அவனது கடவுள் தன்மை வாய்ந்த இயல்புகளின் படிதான் நிர்ணயித்தது. மனிதனை அவனது நடவடிக்கைகளிலிருந்து தனிமைப் படுத்தி மதிப்பிட்டது.

சமூகக் கொடுமைகளை முறியடித்து வெற்றி கண்டதால்தான் சோஷலிஸ்ட் மனிதத்துவம் சுரண்டலற்ற நாட்டில் வாழ்கிறது. மனிதன் உழைப்பாளியாக, சிருஷ்டி கர்த்தாவாக விளங்கவில்லையென்றால் அவன் மனிதனேயல்ல என்று கூறுகிறது சோஷலிஸ்ட் மனிதத்துவம்.(SOCIALIST HUMANISm) சோஷலிஸ்ட் இலக்கியத்தின் முக்கியமான அம்சங்களிலே ஒன்று என்னவென்றால், அது ஒரு சாதாரண மனிதனைப் போர்வீரனாக, உழைப்பாளியாக, சுறு சுறுப்புமிகுந்த பாத்திரமாக, புதிய கண்டுபிடிப்புகளின் கர்த்தாவாக இயற்கையையும், சமூகத்தையும் மாற்றியமைக்கும் நவயுகச் சிற்பியாகச் சித்தரிப்பதுதான்.

இந்த இலக்கியங்களில் நடமாடும் கதர் பாத்திரங்கள் இரத்தமும், சதையும் நிறைந்து ஜீவன் ததும்பும் பாத்திரங்களாக இருப்பதோடல்லாம... எதிர்காலத்திற்காகவே எண்ணியும் வாழவும் செய்கிறார்கள். அவர்களது ஆக்க சக்திபடைத்த அன்றாட அலுவல்களில் கூட வெள்ளத்துடன் அடித்துச் சல்லப்படும் விதியற் ... ளாக இல்லாமல் எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனையுடன் அதைத் தன் வசமாக்கும் கர்ம வீரர்களாகவே நமக்குக் காட்சியளிக்கிறார்கள்.

சோஷலிஸ்ட் யதார்த்தவாதம் (Socialist Realism) என்றால் என்ன?

வாழ்க்கையை அதன் வளர்ச்சி விதிகளின் படி சித்தரிக்கும் திறமை—அன்றாட வாழ்க்கையில் எதிர்காலத்தின் கரு இருப்பதை சத்தியக் கண்கொண்டு ஆராய்ந்துதெள்ளத் தெளிய எடுத்துக் கூறும் திறன்—அதுவே சோசலிஸ்ட் யதார்த்தவாதம் எனப்படும். சோஷலிஸ யதார்த்தவாதம் பண்டைய இலக்கியத்திலே யதார்த்த வாதத்திற்கும் அதீத கற்பனா வாதத்திற்கும் (Romanticism) இடையே நிகழும் முரண்பாட்டைக் கெல்லி எறிந்து விடுகிறது.

ப்ளாட் (மேடம்பவாரி எழுதியவர்) ஒரு யதார்த்தவாதி என்றாலும் அவருக்கு மனித குலத்தின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் நம்பிக்கையில்லை ஆகவே ,அவரது நூல்களில் காணப்பெறும் யதார்த்தவாதம் மகத்தான லட்சியங்களின் ஒளியற்று, பூமியிலே அதிகம் புதைந்து கிடக்கிறது.

விக்தர் ஹியுகோ உன்னதமான லட்சியவாதங்களினால் உந்தப் பெற்று விண்ணிலே சிறகடித்துப் பறந்தார். ஆனால் அவரது பாதங்கள் பூமியிலே பதிந்திருக்கவில்லை. அவருடைய அதீத கற்பனாவாதம் மண்ணிலே முளைவிடவில்லை. வாழ்க்கையின் சரித்திர பூர்வமான உண்மையிலே வேர் ஊன்றவில்லை.

வாழ்க்கை வளர்ச்சியை உண்மையான அஸ்திவாரமாக் கொண்டிருப்பதால் சோஷலிஸ்ட் யதார்த்தவாதம் புரட்சிகரமான அதீதக் கற்பனாவாதத்தை (Revolutionary) தன்னுள் கொண்டிருக்கிறது.

சோஷலிஸ யாதார்த்தவாதம் என்பது குருட்டுக் கோட்பாடல்ல. அது கலைஞனின் சுயபண்பையும் விதவிதமான கலா ரூபங்களையும் பேணிப் பாதுகாக்கும் பெட்டகமாகும்.

உலகிலே உண்மையைவிடச் சக்தி வாய்ந்தது வேறு ஒன்றுமில்லை. உண்மை ஒன்றுதான் சுதந்திரஜோதியாய் விளங்குகிறது. எந்தக் கட்சியில் உண்மை இருக்கிறது என்று கண்டபிறகுதான் யாருக்கு சுதந்திரமிருக்கிறது என்பதை நாம் தீர்மானிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘எழுத்து’க்குப்பதில்

# பொருளும் விமர்சனமும்

கா. சிவத்தம்பி

‘எழுத்து’ எனும் பத்திரிகையின் தைமாத இதழில் அதன் ஆசிரியர் திரு சி. சு. செல்லப்பா இலக்கியத்தில் ‘‘இலக்கியப் புறம்பான அக்கறைகளை முன்வைத்துக் கொள்ளக்கூடாது’’ என்றும், அதற்காகத் தான் போராட்டத்தில் இறங்கியிருப்பதாகவும் கூறியுள்ளார்.

‘கலைச்செல்வி’ என்னும் சஞ்சிகையில் திரு. க. கைலாசபதி எழுதிய ‘பொருள்மரபும் விமர்சனக்குரல்களும்’ என்னும் கட்டுரையில் காணப்படும் அடிப்படைக் கருத்தையும், அக்கருத்திற்கு உதாரணங்கொடுத்து விளக்குவதுபோன்று அமைந்திருக்கும் திரு. தி. க. சிவசங்கரனது ‘இப்படியும் ஒரு கருத்து’ என்னும் கட்டுரையையும் வைத்துக்கொண்டு அவ்வகையான கருத்துக்கள் இலக்கியத்தில் இடம் பெறக்கூடாதென வாதாடியுள்ளார்.

மணிக்கொடிகாலத்திற்குப் பின்னர் முதல் தடவையாக இலக்கிய விமர்சனத்தின் பண்பும் பணியும் பற்றிய ‘கொள்கைப் போராட்டம்’ ஒன்றினைத் திரு செல்லப்பா தொடங்கி வைத்துள்ளார். தாம் நம்புவது சரியானதே என்ற அவர் மனத்திண்மையை நாம் பெரிதும் போற்றுகின்றோம். இலங்கையில் உள்ள சில ‘விமர்சகரே போன்ற விழலுகள்’ போலல்லாது ஒளிப்பு மறைப்பின்றித் தனது கொள்கைகட்காகப் போராட முன் வந்துள்ளார் திரு. சி. சு. செல்லப்பா. இவரது கருத்தையே கொண்டுள்ள அவர்கட்கு இவரது துணிவும் தோன்றுமாறு இறைவனைப் பிரார்த்திப்போமாக!

திரு. செல்லப்பாவினது கருத்தினை ஆராய முன்னர் அவர்தம் கட்டுரையில் எவற்றைச் சொல்ல முயன்றிருக்கின்றார் என்பதைத்திட்ட வட்டமாக அறிந்து கொள்ளுதல் அவசியம்.

இன்றைய சிலரது விமர்சனப் போக்கினைக் குறிப்பதற்குத் திரு. கைலாசபதி கையாளும் சொற்றொடரான ‘ரசிகவிமர்சனம்’ என்பதை இகழ்ச்சி நிலையில் வைத்துப் பார்க்கக் கூடாது என்றும், இலக்கியத்திற்குப் புறம்பான விஷயங்களை இலக்கியத்துட் கொண்டு வரக் கூடாது என்றும் ஆரம்பிக்கும் திரு. செல்லப்பா அவர்கள், அடுத்துச் சிதம்பர சுப்பிரமணியத்தின் இலக்கியக் கொள்கையையும், மறுமலர்ச்சிக் குழவினரையும் குறைத்துப் பேசும் திரு. தி. க. சிவசங்கரனை வன்மையாகக் கண்டிக்கின்றார்’ திரு. தி. க. சிவசங்கரன் முன்னர் எழுதியவற்றைக் கொண்டு அவரது இக்கருத்து எவ்வாறு பிழையானது என்று காட்ட முனைகின்றார்.

அடுத்து, வ. வே. சு. ஐயரின் விமர்சனக் கருத்தைக் கைலாசபதி தவருக விளங்கிக் கொண்டு விட்டார் என்று சொல்கிறார். ஐயரின் கருத்தை இக்கால விமர்சகர்கள் தவருக விளங்கிக் கொண்டு விட்டார்கள் என்று சொன்னகைலாசபதியே ஐயரைத் தவருக விளங்கிக் கொண்டு விட்டாரென்று சொல்லும் திரு. செல்லப்பா, ஐயரின் ‘‘உண்மையான கருத்தினை’’ எடுத்துக் கூறவில்லை. திரு. தி. க. சிவசங்கரனது கருத்தை எதிர்க்கும்பொழுது ஆதாரங்கள் காட்டித் தர்க்கிக்கும் இவர், ஐயரைக் கைலாசபதி எவ்வாறு தவருக விளங்கிக்கொண்டார் என்பதை நிரூபிப்பதற்கு, கைலாசபதி கூறுவதற்கு எதிராக ஐயர் சொல்லியுள்ளவற்றைக் காட்டியிருத்தல் வேண்டும். அதைவிட்டு, வெறுமனே ‘ஐயர் கருத்தைக் கைலாசபதி சரியாகப் புரிந்து கொள்ளாததால்தான் திசை மாறின அபிப்பிராயத்தைச் சொல்கின்றார்’’ எனக் கூறுகின்றார். இவ்வாறு இவர் சொல்லும்பொழுது திரு. வ. வே. சு. ஐயர் சொல்லியுள்ளவை இவரது கருத்தை ஆதரிக்கிறதென்றே, அல்லது ஐயர் அவர்கள் தமிழ் இலக்கிய விமர்சனம் பற்றிச் சொன்னவற்றைத் திரு. செல்லப்பா ஆதரிக்கின்றாரென்றே கொள்ளுதல் ஆகாது. ‘‘ஐயரின் ரசனை பூரணமானது என்று முடிவுகட்டிவிட முடியாது’’ என்றும் ‘‘ஐயர் கோடிகாட்டியவர், அவ்வளவுதான் பின் வருபவர் மேலே மேலே சேர்க்கக் கூடும். இலக்கியத்துறை இதுக்கு இடம் கொடுப்பது’’ என்றும் சொல்கின்றார்.

தொடர்ந்து இலக்கியத்தில் வடிவம் முக்கியமெனச் சொன்னாலும் பொருளுக்கும் தாம் முக்கியத்துவம் கொடுப்பதாகச் சொல்லித்தமது அக்கருத்தினை உவமை மூலம் விளங்கப் படுத்தியுள்ளார். இலக்கியத்தை முகத்திற்கும், வடிவத்திற்குக் கண்ணையும், மூக்கு காதிற்குப் பொருளையும் உவமிக்கின்றார். இலகியத்தில் பொருளுக்குரிய இடத்தினை நேரடியாகச் சொல்லாத அவர் முகத்திற்குக் கண் போல, இலக்கியத்திற்கு வடிவம் அமைகின்றது என்று உவமையால் விளங்க வைக்கின்றார்! இது அவர் பொருளுக்குக் கொடுக்கும் இடத்தை எடுத்துக் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவில், இலக்கிய விமர்சனத்தின் பணியும் பண்பும் பற்றியும், இலக்கியத்தில் பொருளுக்கும் வடிவத்திற்குமுள்ள தொடர்பு பற்றியும் தமது கருத்தினைத் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

''பொருள் இல்லாமல் வெறுமையில் இலக்கியப் படைப்பு உருவாகவே முடியாது. இலக்கியம் மட்டுமென்ன, எந்தத் துறையிலுமேதான். ஆனால் பொருளுக்குரிய இடம் துறைக்குத் துறை அந்தஸ்து வித்தியாசம் உண்டு. விஞ்ஞானம், தத்துவம் இவைகளில் முழு அளவுக்கு, கலையில் குறைந்த அளவுக்கு, அதிலும் சங்கீதத்தில் குறைந்த பட்ச அளவுக்கு, இலக்கியத்தில் ஒரு அளவுக்கு. ஏனென்றால் அங்கே அறிவு ரீதியாகக் கொள்ளப்படும் பொருள்மட்டுமின்றி உணர்ச்சி ரீதியாகக் கொள்ளப்படும் எழுச்சிகளை எழுப்ப ஏதுவாக உள்ள பல்வேறு சாதனங்கள் கலக்கின்றன. இவை தமக்கு உரிய தனித் தனி இயல்புகளை இயைவிக்கின்றன. இந்த இயைவால் உருவாகிற கோவைதான் இலக்கியம்.

இலக்கியம் பற்றி ரசிக விமர்சனம்தான் இருக்கமுடியும். அது முதன்மையாக அழகியல் அடிப்படையில்தான் இயங்க முடியும்.

எனவே பிரச்னைக்குரிய விஷயங்களாக இருப்பவை இரண்டு. முதலாவது இலக்கியத்தில் பொருளுக்கான இடம், இரண்டாவது 'ரசிகவிமர்சனம் எனும் சொற்றொடர் பற்றியது. இவற்றுள் 'ரசிக விமர்சனம்' பற்றிய பிரச்னை இலக்கிய விமர்சனம் பற்றிய பல முக்கிய பிரச்னைகளைக் கிளப்பி விடுவதால் முதலில் அதனை ஆராய்வோம்.

திரு. க. கைலாசபதி தனது கட்டுரையில் ''இலக்கியத்திலே அமைப்பு அல்லது வடிவமே அடிப்படையானது என்று தலைதடுமாறும் இரசிக விமர்சகர்'' என்றும் ''எதையும் இலக்கியத்தில் கூறலாம், அது எப்படிக் கூறுகிறது என்பதே முக்கியம் என்று அழகியல் பேசும் ரசிக விமரிச்சகர்கள்'' என்றும், ''மேடைப் பேச்சைப்போல ரசிக விமாசனம்'' என்றும் கூறுவதன் மூலம், தான் ரசிக விமர்சனமெனக் கருதுவதை ஓரளவு விளக்கியுள்ளார். அதனைத் திரு செல்லப்பாவும் உணர்ந்துள்ளார் என்பது தெரிகிறது. இலக்கிய ரசனை என்று சொல்லும்பொழுது ரசனை எனும் சொல் பெறும் கருத்திற்கும், ரசனை விமர்சனம் என்று சொல்லும்பொழுது 'ரசனை' எனும் சொல்பெறும் கருத்திற்கும் வித்தியாச முண்டென்பதை எல்லோரும் ஒத்துக்கொள்வர். ''ரசிக விமாசனம்'' எனத் திரு. செல்லப்பா அவர்கள் குறிப்பிடுவது, விமர்சனத்தின் மூலம் இலக்கியம் நன்கு சுவைக்கப்படுவதையே என்பது தெளிவாக விளங்குகின்றது.

இப்பிரச்னை, இலக்கிய விமர்சனத்தின் நோக்கம் பற்றிய பல கேள்விகளை எழுப்புகின்றது. திரு. சி. சு. செல்லப்பா அவர்கள் ''அழகியல் அடிப்படையிலான ரசனையே'' இலக்கிய விமர்சனத்தின் நோக்கமெனக் கருதுகின்றார் என்பது திட்டவட்டமாகத் தெரிகின்றது.

திரு. செல்லப்பாவின் கருத்தினை அவர் சொற்கொண்டே எடுத்துக்கொள்வோம். ''கலையில் ஒரு பிரிவான இலக்கியம், முதன்மையாக ஒரு ரசனைக்குரிய துறையல்லாமல் வேறு எதுக்கு உரியதாயிருக்கும் என்று நிதானிக்க முடியவில்லை'' என்பது அவர் கொள்கை. ரசனைக்குரியதென்பதும் சுவைத்தனுபவத்தற்குரியதெனக் கருதப் பெறும். எனவே, திரு. சி. சு. செல்லப்பா அவர்களைப் பொறுத்த வரையில் இலக்கியமென்பது சுவைத்துஅனுபவிப்பதற்கே என்பது நன்கு தெரிகின்றது. இவ்வாறான ஒரு நோக்குச் சரியானதா என்பதைப் பிரபல ஆங்கில விமர்சகர் கண்கொண்டு பார்ப்போம்.

சிறந்த முறையில் வாசிப்பதனால் ஏற்படும் இன்பத்திற்காகவே ஒரு கவிதையை வாசிப்பதென்பது, கவிதையைச் சரிவர அறியும் ஓர் முறைமையாகவே இருக்காது என ஐ. ஏ. றிச்சாட்ஸ் அவர்கள் கூறியுள்ளார்.

To read a poem for the sake of pleasure which will ensue if it is succesfully/f read, is to approach it in an inadequate attitude. Obviously it is the poem in which we should be interested not in a by- product of having managed successfully to read it. -(principle, of literary criticism page -96, 1950)

கவிதையிலேயே முக்கிய கவனம் செலுத்த வேண்டுமே யல்லாது கவிதையை நன்கு வாசித்ததனால் ஏற்பட்ட ஓர் உப உணர்வை முக்கியமாகக் கருதக் கூடாது என்றும் விளக்கமாகக் கூறியுள்ளார். அதாவது கவிதையை வாசிப்பதனால் ஏற்படும் உணர்வு நிலையை முக்கியமாகக் கருதுவதனால் கவிதையை நன்கு விளங்கிக் கொள்ள முடியாதென்று அவர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். மேலும் கவிதையை வாசிப்பதால் ஏற்படும் உணர்வு, அல்லது அனுபவம், கவிதைப் பொருளிலிருந்து வேறுபட்டதாக அமைந்து விடக்கூடாதென்றும். அவ்வாறு ஏற்படுமேயானால் அது பூரணமடையாத குறுகிய சமநிலையற்ற உணர்வினை ஏற்படுத்தி விடுமென்றும் கூறியுள்ளார், திரு. ஐ. ஏ. றிச்சாட்ஸ்.

**The separation of poetic experience from its place in life and its ulterior worths, involves a definite lopsidedness narrowness and incompleteness in those who preach it sincerely.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதையால் தோன்றும் அனுபவத்தை மாத்திரம் எடுத்துக் கொண்டு, அவ்வனுபவம் தோன்றுதற்கான அடிப்படைக் காரணங்களையும் அது எவ்வாறு தோன்றுகின்றதென்பதையும், ஏன் தோன்றுகின்றதென்பதையும் கவனியாது விட்டால் விமர்சனம் முழுமையடையாது. அவ்வாறு அடிப்படை விஷயங்களை ஆராயாத விமர்சகர்களை பட்டுப் புடவையின் தூசித்தட்டும் விமச்சகர் என்று அழைப்பர். rushess of noblemes dloths அவ்வாறு அடிப்படை விஷயங்களைப் பற்றி ஆராய்கின்ற பொழுது இலக்கியத்துடன் நேரடித் தொடர்பு கொள்ளாதவை போன்றிருக்கும் இலக்கியத்திற்குப் புறம்பான விஷயங்களும் விமர்சனத்துள் வரும். அதைத் தவிர்க்க முடியாது. தவர்த்தால் இலக்கியத்தையும் இலக்கிய ஆசிரியன் ஏன் அவ்வாறு எழுதியுள்ளான் என்பதையும் அறிய முடியாது போய் விடும்.

Literature becomes an enormous Factor in sustaining or in altering the practical world in which we-live. To touch literature is indubitably to touch the scheme of values which upholds society upon its course - HENRY - W - WELLS - THE REALM of LITERATURE.

நாம் வாழும் நடைமுறை உலகினையே மாற்றியமைக்கக் கூடியதாக இலக்கியம் இருக்குமானல் வாழ்க்கை பற்றிய அடிப்படை உண்மைகள் இலக்கிய விமர்சனத்தில் இடம் பெறுவதை நாம் எவ்வாறு இலக்கியத்திற்குப் புறம்பானதாகக் கொள்ளலாம்? வாழ்க்கையை அறிந்து கொள்வதற்கு இலக்கியம் உதவுகின்றது. இலக்கியத்தை அறிய விமர்சனம் உதவுகின்றது என்பது ஜேம்ஸ் ரீவ்ஸ் என்பாரது கொள்கை.

***Literature helps us to understand life and criticism helps us to understand literature–JAMES REEVES-THECRITICAL SENSE.***

இக்கருத்தினைச் சற்றுத் தெளிவாகவும் விரிவாகவும் ஹேபேட் றீட் கூறியுள்ளார். கலையாக்கம் எவ்வாறு தோன்றுகின்றதென்பதைக் கலைஞனது உளஅமைப்பிலும் சமூகத்தின் பொருளாதார அமைப்பிலும் காணமுனைவதே அடிப்படை இலக்கிய விமர்சனமாகும் என்று அவர் கூறியுள்ளார்.

Only basic literary criticsm is that which traces the or igin of the work of art in the psychology of the individvidual and in the economic structure of the society - H Read.

எனவே இலக்கியம்பற்றி ஆராய்கின்றபொழுது இலக்கியத்துடன் நேரடிசம்பந்தப்படாத வாழ்க்கை பற்றிய அடிப்படை உண்மைகள் இடம் பெறுகின்றன என்பது தெரிகின்றது. நேரடியாகவல்லாது மறைமுகமாகச் சம்பந்தப் பட்டிருப்பவற்றை உணராததனாலேயே திரு: சி. சு. செல்லப்பா அவர்கள் அவ்வாறு முக்கியமான அடிப்படை விஷயங்களின் தொடர்பினை அறியாது, அவற்றை " இலக்கியப் புறம்பான அக்கறைகள் " என்று ஒதுக்கித் தள்ளினர் என்பது தெரிகின்றது. ஒரு கவிதையினை எடுத்து ஒவ்வொரு சொற்களாக ஆராய்ந்து அதை ஆசிரியரது உணர்வுடன் தொடர்புபடுத்திக் கவிதைக்குள் 'உள்நின்று' விமர்சனம் செய்த லீவிஸ் அவர்கள் கூட உண்மையான இலக்கிய ஆர்வமென்பது மனிதனைப் பற்றியும், சமூகத்தைப் பற்றியும் நாகரிகத்தைப் பற்றியும் கொள்ளும் ஆர்வமென்றும் அதன் எல்லையை வரையறுக்க முடியாதென்றும் சொல்கிருர்.

To insist that literary criticism is or should be, a specific discipline of intelligence is not to suggest that a serious interest in literature can confine itself to the local analysis associated with "Practical critcism" - to the scrutiny of the "words of the page" in their minute relations, their effection imagery and so on: a real litarary interest is an interest in man society and civilisation and its boundaries cannot be drawn - F.R. Leavis. Scrutiny xiii, i 78 -- quoted in "the modern age."

எனவே இலக்கியத்தின் கருப்பொருளான வாழ்வையும் வாழ்க்கைப் பிரச்சினைகளையும் ஆதாரசுருதியாகக் கொண்டு இலக்கியத்தையும், இலக்கிய கர்த்தாக்களையும் மதிப்பிடுதல் " இலக்கியப் புறம்பான விஷயமாகாது " என்பது நன்கு தெளிவாகின்றது.

தமிழ்நாட்டில் இன்றிருக்கும் விமர்சன முறையைப் பற்றி எழுதும்பொழுது, திரு. க. நா. சுப்பிரமணியம் அவர்கள் " காலஷேப விமர்சனம் " என்னும் தொடரினை "ஹிந்து" பத்திரிகையில் வெளிவந்த ஒரு விமர்சனக் கட்டுரையில் பாவித்துள்ளமையையும் நாம் மறந்து விடுதல் கூடாது. சமுதாயக் கண் கொண்டு இலக்கியத்தைப் பார்க்காத திரு. க. நா. சுப்பிரமணியமே தமிழ் நாட்டில் இருக்கும் விமர்சனமுறைமையைக் கண்டித்திருக்கிருர். எனவே சமீப காலத் தமிழ் இலக்கிய விமர்சன வரலாற்றை அறிந்தவர்கட்குக் கைலாசபதியின் இச் சொற்பிரயோகம் எந்த முறையிலும் ஆச்சர்யத்தினைத் தராது. விமர்சனத்துறையில் காணப்படும் குறைகள் பற்றிய முறைப்பாட்டு வளர்ச்சியாகவே இதனை நாம் கொள்ளுதல் வேண்டும்.

" கலையில் ஒரு பிரிவான இலக்கியம் முதன்மையாக ஒரு ரசனைக்கு உரிய துறையாக இல்லாமல் வேறு எதுக்கு உரியதாக இருக்கும் என்று எம்மால் நிதானிக்கமுடியவில்லை " என்று சொல்வதன் மூலம் இலக்கியம் ரசனைக்குரியதே, வேறொன்றுக்குமல்ல என்று திரு. செல்லப்பா கூறுகின்ருர். ' கலை கலைக்காகவே ' என்ற கொள்கையினர் கூட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியம் ரசனைக்காகவே என்று இவ்வாறு துணிந்து கூறமாட்டார்கள் என்பது துணிபு. ரசனை என்பது பற்றி திரு. செல்லப்பாவின் கருத்து என்னவென்று மக்குக் கட்டுரையில் தெரியவில்லை. என்றாலும் அகராதி தரும் கருத்திற்கு எதிரான கருத்துடையதாக இருக்க முடியாது என்பது மாத்திரம் திண்ணம். இரசனை என்னும் சொல்லிற்கு '' சுவைபார்த்தனுபவித்தல் '' என்றும், '' சுவை '' என்றும் '' இரசித்தல் '' என்பதற்கு '' ருசியை அனுபவித்தல் , '' '' இனித்தல் '' என்றும் கருத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. திரு. செல்லப்பா அவர்களே '' இலக்கியம் பற்றி ரசிக விமர்சனம் தான் இருக்கமுடியும் '' என்றுஅழுத்தம் திருத்தமாகச் சொல்லுகிறார். அப்படியானால் இலக்கிய சுவை றிதலும் எவ்வாறு சுவைப்பதென்றுதீர்மானிப்பதேயாகும். நாம் முன்னர் பார்த்த விமர்சன நோக்கங்கள் எதுவுமே இக்கருத்தினை ஆதரிக்காது என்பது நன்கு தெரிகின்றது. ஆத்மீகவாதிகள் கூட இலக்கியம் என்பது உள்ளத்தைப் பண்படுத்தி உயர்ந்த நிலைக்கு ஆற்றுப்படுத்துவது என்பர். இலக்கியம் சுவைக்க எனச் சொல்பவர்கள்''பொஹீமியன்ஸ்'' (BOHEMIANS) எனப்படும் உணர்ச்சிக் கட்டற்றவர்களேயாகும். திரு. சிதம்பர சுப்பிரமணியம் கூட இக்கருத்தினை ஒத்துகொள்ளமாட்டார். வெறி கிளம்பவேண்டுமே என்பதற்காகக் குடித்தல் போன்று சுவைப்தற்காக இலக்கியம் என்றும் நிற்காது. சுவைப்பதனால் ஏற்படும் பயன்யாது? சுவைக்கும் அந்தப்பண்புகள் எவ்வாறு தோன்றின ? அதனை ஆசிரியர் எவ்வாறு கையாண்டுள்ளார் என்பன போன்ற கேள்விகள் கூட ரசிகவிமர்சனத்தில் இடம் பெறாது.

ரசிக விமர்சனம்தான் இலக்கியத்திற்குரியது என்றால், இலக்கியத்தால சமுகத்தில் ஏற்பட்ட மாற்றங்கட்கு நாம் எவ்வாறு நியாய அமைதி கூறுவது? அன்றாட வாழ்க்கையைக் கட்டுப் படுத்தும் மத இலக்கியங்கள், சமுகப்புரட்சியைத் தூண்டிவிட்ட இலக்கியங்கள், இயக்கங்களைக் கட்டி வளர்த்த இலக்கியங்கள் போன்ற இலக்கியங்கள் இக்கண்ணோட்டத்தில் பெறும் இடம் யாது? இலக்கியத்தில் உள்ள சுவைதான் இதற்கெல்லாம் காரணமா? அல்லது சுவைபடச் சொல்லப்பட்ட பொருள் காரணமா? பொருள்தான் என்பதைத் திரு. செல்லப்பா மறுக்கமாட்டார். எனவே, சுவை என்பது உத்தியே தவிர முக்கிய விஷயமல்ல என்பது தெளிவாகின்றது. எனவே சுவையறி விமர்சனம் என்பது கயிற்றை விட்டு வாலைப் பிடித்த கதையாக வல்லவா ஆகிவிடுகின்றது. சுவையாகச் சொல்லப்படும் பொருளை விட்டு விட்டுச் சுவையையே முக்கியமாகக் கொண்டால் இலக்கியத்தை விளங்கிக் கொள்ள முடியுமா என்பதை நாம் ஆராய்ந்து பார்த்தலவசியம்.

மேலும் தொடர்ந்து 'அது (ரசிகவிமர்சனம்) அழகியல் அடிப்படையில்தான் இயங்க முடியும், என்று சொல்கின்றார். ஆங்கிலத்தில் **Aesthetics** எனக் கூறப்படுவதையே அழகியல் என இவர் கொள்கிறார் என்று நம்புகிறோம். தமிழ் இலக்கிய விமர்சனங்களில் அடிக்கடி குறிக்கப்படும் 'கலையம்சமே' இது. முருகுணர்ச்சி அல்லது அழகியல் எனப்படும் இதனை எடுத்துக் கொள்ளப்படும் இலக்கிய ஆக்கத்திற்குப் புறம்பான ஒன்றாகக் கொள்ளக்கூடாது என்பதை மாத்திரம் மனத்திருத்தல் அவசியம்.

we wish to stres very strongly that the aesthetic value of a poem does not lie as is sometimes inplied in the separate parts which make up the poem, in the bowel and consonant music, f.r instance, or in the use of figures of speech; nor does it lie in the attractive subject matter; nor again - any more than style - in some - '' NAMELES GRACE '' which exudes from the poem like an odour, it is not an extra something, like the icing on a cake, to cure the reader.. to think about the writer's thoughts and to feel his feelings

# எழுத்தாளர்களுக்கு

இ. மு. எ. சங்கம் நடத்தவிருக்கும் அகில இலங்கைத் தமிழ் எழுத்தாளர் மகாநாடு வெகுசீக்கிரத்தில் கொழும்பில் நடைபெறும். திகதி விரைவில் அறிவிக்கப்படும்.

மகாநாட்டில் சமர்ப்பிப்பதற்கான தீர்மானங்களை பல எழுத்தாள நண்பர்கள் ஏற்கனவே அனுப்பியுள்ளார்கள். தமது தீர்மானங்களைச் சமர்ப்பிக்க விரும்பும் நண்பர்கள் தயவு செய்து அவற்றை ஏப்ரல் 10ந் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மகாநாட்டில் பிரதிநிதிகளாக் கலந்து கொள்ள விரும்புபவர்கள் முன்கூட்டியே எழுதித் தெரிவிக்குமாறும் வேண்டுகிறோம்.

அடுத்த ''புதுமை இலக்கிய'' இதழ் மகாநாட்டு தயாரிப்பு இதழாக வெளிவரும்.

இ. மு. எ. ச.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the aesthetic value of the poem is the worth of the whole thing when experienced responded to as completly as possible by the reader; the aesthetic pleasure is the pleasure of experiencing the poem as a whole, of respondin to it as completly as possible (ALEC KING AND MARTIN KETLEY IN THE CONTROL OF LANGUAGE)

இனி, இலக்கியமும் பொருளும் பற்றி திரு. செல்லப்பா கூறியுள்ளதை எடுத்துக் கொள்வோம். பொருள் என்பதற்கு உள்ளடக்கம் (content) எனும் கருத்தை எடுத்துக் கொண்டாரா அல்லது உணர்த்தப்படும் பொருள் (meaning) என்னும் கருத்தை எடுத்துக் கொண்டாரா என்பது ஐயத்திற்குரியதாகவே தோன்றுகின்றது. விஞ்ஞானம், தத்துவம், கலை என்று தனித்தனியே பேசுகிறபொழுது உணர்த்தப் பெறும் பொருளையே முக்கியமாகக் கருதுகின்றார் என்று தோன்றுகின்றது. ஆனால் இலக்கியம் பற்றிச் சொல்லும் பொழுது "இலக்கியத்தில் ஓர் அளவுக்கு. ஏனென்றால் அங்கே அறிவு ரீதியாகக் கொள்ளப்படும் எழுச்சி நிலைகளை எழுப்ப ஏதுவாக உள்ள பல்வேறு சாதனங்கள் கலக்கின்றன" என்று சொல்கிறார். அப்படியானால் 'எழுச்சி நிலைகளை எழுப்ப ஏதுவாக உள்ள பல்வேறு சாதனங்களுக்குப் பொருள் இல்லையா? ஓர் அளவுக்குத்தான் பொருள் உண்டு என்றால் எந்த அளவுக்கு உண்டு? எந்த அளவுக்கு இல்லை? இலக்கியத்தில் பொருளுக்குரிய இடம் பற்றி நடக்கும் விவாதத்தில், தமது முடிவுரையைத் தொகுத்துக்கூறும் பொழுது. ஓர் 'அளவுக்குப்' பொருள் இருக்கவேண்டுமென்பது பற்றித் தீர்க்கமான கருத்து இல்லாமலே முடிவுரை சொல்லதா? இவ்வாறான பல கேள்விகள் எழுகின்றன. ஆனால் கைலாசபதி 'பொருள் மரபும் விமரிசனக் குரல்களும்' என்ற கட்டுரையில் பொருள் என்னும் சொல்லால் உள்ளடக்கத்தையே (content) கருதியிருக்கிறார் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. திரு. செல்லப்பாவும் இதனை நன்கு விளங்கியுள்ளார் என்பது 'முகத்தில் கண்கள் முக்கியம் என்றால் மூக்கு காது இன்றியமையாதது என்று ஆகும் – என்று ஒருவர் முடிவு கட்டிவிட்டால்' எனும் வாக்கியத்தின் மூலம் தெரிய வருகின்றது. இன்னும் முன்னர் வடிவம் (form) பற்றிய பிரச்சனை தோன்றி யுள்ளதனாலும் உருவமும் உள்ளடக்கமுமே (form and content) அதிகாரம்பட்டு நிற்கும் பிரச்சனையாகும். இலக்கியத்தில் உருவம் வேறு உள்ளடக்கம் வேறு எனக்கொள்ளுதல் தவறான ஒரு கொள்கையாகும். உள்ளடக்கமே உருவத்தைத் தீர்மானிக்கின்றதென்றும் உருவம் உள்ளடக்கத்திற்கு ஓர் அமைப்பினைக் கொடுக்கிறதென்றும், உண்மையில் ஆராயுமிடத்து உள்ளடக்கத்தையே முதலில் ஆராயவேண்டுமென்றாலும். இரண்டையுமே ஓரே சமயத்தில் தீர்மானித்தல் அவசியம் என்றும் ஜேம்ஸ்றீவ்ஸ் கூறுகிறார்.

Content determines form and form modifies content. Although it is usually easier and more logical to examine content first and then form, we must keep both in mind simaltaneously - (James Reeves -)

இவற்றில் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிப்பின் ஆக்கம் சிறக்காது. உருவத்திற்கும் உள்ளடக்கத்திற்குமுள்ள தொடர்பு பற்றியும், தமிழ் இலக்கியத்தில் அது எவ்வாறு காணப்படுகின்றது என்பது பற்றியும் 'குழந்தை ஒரு தெய்வம்' எனும் சிறு கதைத் தொகுதிக்கு எழுதியுள்ள முன்னுரையில் விளக்கமாகக் குறித்துள்ளேன்.

"இலக்கியத்தில், ஒல்வொரு காலப்பிரிவிலும், அவ்வக்கால இலக்கியகாரர் சொல்ல விரும்புவதற்கு வாய்ப்பாக அமைகின்ற 'சொல்லுகிற முறைமை' தான் உருவம் என்பதாகும். 'சொல்லுகின்ற முறைமை' என்பது சால்லப்படுவதைக் கொண்டு தீர்மானிக்கப் படவேண்டுவது என்பதை எல்லாரும் ஒப்புக்கொள்வர். சொல்லப்படுவது மாறுகின்றபொழுது, சொல்லுகின்ற முறைமையும் மாறவேண்டுவது அவசியமாகின்றது. அப்படி அது மாறாமலிருக்குமானால், சொல்ல விரும்புவது முழுவதையும் சொல்லிவிட முடியாதும் போய்விடலாம்; அல்லது சொல்ல விரும்புவதைத் தெளிவுறச் சொல்லிவிட முடியாதும் போய்விடலாம். (குழந்தை ஒரு தெய்வம்: முன்னுரை)

எனவே இலக்கியத்திலுள்ள பொருளையும் வடிவத்தையும் பிரித்துக் தனித்தனி அம்சங்களாகப் பார்த்துள்ளமை விமர்சன மரபிற்குப் பொருந்தாது என்பது தெட்டத் தெளிவாகின்றது.

தண்டியலங்காரம் பன்னிருபாட்டியல் போன்ற இலக்கண நூல்களில், காப்பியம், உலா, ஆற்றுப்படை போன்ற இலக்கிய உருவங்கள் (form) பற்றி எழுதப்பட்டிருக்கின்றனவே யென்று எவராவது சொன்னால், அப்பிரபந்த முறையில் சொல்லப்படவேண்டிய பொருள் (content) பற்றியே அவ்விலக்கணங்கள் கூறுகின்றன என்பதையும், குறிப்பிட்ட அப்பொருள் (content) இல்லையேல் அவ்வுருவம் (form) பூர்த்தியடையாது என்பதே அதன் கருத்து என்பதையும் அறிவார்களாக.

இலக்கியத்தில் பொருளுக்கு இடமுண்டு என்று திரு சி. சு. செல்லப்பா அவர்களும் ஒத்துக் கொள்கின்றார். ஆனால் அது 'ஒரு அளவுக்கு' மாத்திரமே என்றார். எந்த அளவுக்கு? அதற்குப் பதில் தரப்படவில்லை. உருவும் ஒரு அளவுக்கு, பொருளும் ஒரு அளவுக்குஎன்ற முறையில், இலக்கியத்தை ஏதோ ஒரு கலவைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாக அவர் நினைக்கின்றாரோ தெரியவில்லை. வேறெந்த நூலில் இல்லாவிட்டாலும் கூட, அவர் தாம் எழுதிய ''வாடிவாசல்'' என்னும் அந்த நாவலில் எந்த அளவுக்குப் பொருள் இருக்கிறது, எந்த அளவுக்கு எழுச்சி நிலைகளை எழுப்பும் சாதனங்கள் இருக்கின்றன. அச்சாதனங்கள் உள்ளடக்கத்தோடு சம்பந்தப்பட்டு நிற்கின்றனவா என்பதை விளக்குவாராயின் நாம் அவர் கருத்தை ஏற்றுக்கொள்ளலாம்.

உருவமும் உள்ளடக்கமும் என்ற தலைப்பில், எழுத்தின் 15வது இதழில் வெளியான திரு நாதன் அவர்களது கட்டுரையின் இறுதிப் பாகத்தினை நினைவுறுத்திக் கொள்ளுதல் நலம். 'உருவமும உள்ளடக்கமும் என்ற இவ்விரு அம்சங்களையும் நாம் துண்டுபட்டு நிற்கும் தனித்தனியான அம்சங்களாய் பார்க்க முடியாது. இரண்டும் ஒன்றுக்கொன்று நெருங்கிய சம்பந்தம் கொண்ட அம்சங்களே. நல்ல உள்ளடக்கம் இல்லாவிட்டால் அது கலையாவதில்லை. அதே போல் நல்ல தொரு உருவ அமைதி அமையாவிட்டால் இது கலை காட்சி தருவதில்லை. எனவே நாம் சேர்க்கும் உருவம் உள்ளடக்கம் இவ்விரண்டின் தன்மைகளையும் உணர்ந்து, இரண்டுக்குள்ளும் ஒரு ஐக்கியத்தையும்பரஸ்பரமான பாந்தவ்யத்தையும் ஏற்படுத்த முயல்வோம்.''

'எழுத்து' வாசகர்களும், ஆசிரியரும்ஆங்கில விமர்சன முறைமையையே அடியொற்றி விமர்சனஞ் செய்து வருகின்றவர்களானமையினாலேயே இக்கட்டுரையில் மேற்கோள்கள் யாவும் ஆங்கில இலக்கிய விமரிசன நூல்களிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன. இலக்கியப் புறம்பான விஷயங்களை' இலக்கியத்திற்குள் கொண்டுவராத விமரிசகர் எனத் திரு சி.சு. செல்லப்பா போன்றோர் கருதும் விமரிசகரது நூல்களிலிருந்தே இம்மேற்கோள்கள் எடுக்கப்பட்டுள்ளன. இலக்கியத்தைச் சமூகத்தின் விளைபொருளாகவும், சமூகத்தைநெறிப்படுத்தும் சக்தியாகவும் காணும் ஆங்கில விமரிசகர்கள் இக்கட்டுரையில் இடம்பெறவில்லை. தமிழ் இயக்கியமரபில் காணப்படும் விமர்சன மரபுகொண்டும் இப்பிரச்சனையை இக்கட்டுரையில் ஆராயாது விட்டுள்ளோம். காரணம் கைலாசபதி சொன்னதே.

(இது பற்றி வரின் வரும்)

---

திருத்தம்

9ம் பக்கம், முதலாவது பந்தியில் உள்ள ஆங்கில வார்த்தைகளை Bru shese of Noblemen's Clothes என்று திருத்தி வாசிக்கவும்.

---

## எழுத்தாளர் புகைப் படக் கண் காட்சி

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம நடத்த விருக்கும் அகில இலங்கைத் தமிழ் எழுத்தாளர் மகா நாட்டில் இடம பெறும் எழுத்தாளர் புகைப் படக் கண்காட்சிக்கு 120 க்கு மேற்பட்ட படங்கள் ஏற்கனவே வந்துள்ளன. இன்னமும தமது படங்களை அனுப்பித் தராத எழுத்தாள நண்பர்களை ஏப்பிரல் 10ந் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அனுப்பவேண்டிய விலாசம்:
காரியதரிசி
எழுத்தாளர் புகைப்படக் கண் காட்சிக் குழு
இ. மு. எ. ச.
26 செனட் அந்தோனிமாவத்தை,
கொழும்பு - 13,

---


இலக்கிய உலகிலும் பத்திரிகை உலகிலும் தனி இடம் வகிக்கிறது

# மரகதம்

ஆசிரியர் இளங்கீரன்

(மாத இதழ்)

ஈழத்தின் தலைசிறந்த கலை இலக்கிய சஞ்சிகை என எல்லோராலும் பாராட்டப் பெறுகிறது

வருட சந்தா ரூ. 6
தனிப் பிரதி சதம் 50
26, சென்ற் அந்தோனி மாவத்தை
கொழும்பு 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் கலை

மக்கள் கலை பெருமன்ற ஏடு

## நீங்கள் எந்தப் பக்கம்?


எச். எம். பி. முஹிதீன்

அமைப்பாளர் ம. க. பெ. ம.


கலை உணர்ச்சி உலக மக்கள் அனைவரினதும் பொதுச் சொத்தாகும். தரத்திலும் தன்மையிலும் வித்தியாசம் இருந்தாலும் உணர்ச்சி பாவத்தைப் பொறுத்தமட்டில், அது ஒன்றே [illegible].

உணர்ச்சி பாவம் ஒருமைப்பாடுடைய தாக [illegible] தன்மையை [illegible] வேறுபட்ட தன்மையுடையதாகும். கலை உணர்ச்சிப் பயன் எப்போதுமே, கலை நோக்குடன், இலட்சியத்துடன் பின்னிப் பிணைந்து வெளிப்படுகிறது.

கலை, சமுதாய வளர்ச்சியின் ஒரு அம்சமாகும். இன்னும் சற்று வலியுறுத்திச் சொல்ல வேண்டுமாயின் சமுதாய வளர்ச்சிக்கு அத்தியாவசியமான பல துறைகளில் கலையும் ஒரு துறையாக இயங்குகிறது. ''எல்லாம் கலை'' என்பது, வெறும் கற்பனுர்த்திகமாகும். இக்கருத்து, யதார்த்த, பௌதீக வாழ்வுக்கு அப்பாற்பட்டதாகும்.

எனவேதான், உலக வரலாற்றில் சமுதாய வளர்ச்சியுடன் கலையும் இணைவுற்று வளர்ந்துள்ளதைக் காண்கிறோம். இதை இன்னும் சற்று ஆழமாகச் சொல்ல வேண்டுமாயின் ''யதார்த்த உண்மைகள், பௌதீக சுற்றுவட்டாரம், சமூக வாழ்வு (இயற்கை) ஆகியவை முதன்மையானவை. இரண்டாவது கட்டத்திலுள்ள, அவைகளின் சிருஷ்டியாகவுள்ள கலை, அவைகளைப் பிரதி பலிக்கிறது. சமுதாயத்திற்கும் கலைக்குமுள்ள சம்பந்தமிவை.

சமுதாய வளர்ச்சியுடன் ஒருமித்து வளர்ந்த கலைகளில், எல்லாக் காலகட்டங்களிலும் இரு பகுதிகளைக் காண்கிறோம். ஒன்று வளர்ந்து அழியும் கலைப் பகுதி, மற்றது, பிறந்து வளரும் கலைப்பகுதி. உணர்ச்சி பாவங்களைப் பொறுத்தமட்டில், அவை அழிவைக் கடந்த சிரஞ்சீவித் தன்மைகளைப் பெற்றிருந்த போதிலும் அவைகளின் சமுதாய பிரதிபலிப்புகள், சமுதாயங்களின் சுழற்சி வேகத்திற்குப் [illegible]யானவைகளே.

இன்றைய காலகட்டத்தில் உழைப்பாள விவசாய, பாமர மக்களின் கலை பிறந்து வளர்ந்து, வளமுறும் கலையாக ராஜநடை போட்டு முன்னேறுகிறது. அதற்கு எதிரான சொத்துடமை பொருளுடமை வர்க்கத்தின் சுகபோகக் கலை, அழிவுக் கலையாக சவக்குழி நோக்கிப் பிரேத பிரயாணத்தில் ஈடுபட்டிருக்


தலைவர்:
நே. கைலாசபதி
உபதலைவர்கள்:
இளங்கீரன்
லடிஸ்வாஸ்
இணைச் செயலாளர்கள்:
எஸ். தனிஸ்
கரவைக் கந்தசாமி
பொருளாளர்:
எஸ். சத்தியசீலன்
உதவிப் பொருளாளர்:
குமாரலிங்கம்
அமைப்பாளர்:
எச். எம். பி. மொஹிதீன்

செயற் குழு உறுப்பினர்கள்
டி. கலைதாசன்
எ. றஹ்மான்
வி. குமார்
பி. ராமநாதன்
எஸ். கந்தையா
சேரன்
ஆனந்தன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. இன்று, மக்கள் கலையாக, விடுதலை முரசு கொட்டி தாயகத்து மக்களை அணி அணியாய்த் திரட்டும் தேசாபிமானக் கலையாக, தேசிய பாரம்பரியத்தை ஏந்தித் தூக்கி எக்காளமிடும் அன்னையின் கலையாகப் பரிணமிக்கிறது. மற்றக் கலை 'சுரண்டல் பிசாசுகளுக்குத் தீனிபோட, பூஜை நடத்தும் கலையாக அடிமைத்தனத்தைத் திணிக்க அரும் பாடுபடும் அராஜகக் கலையாக, அழிவுக் கலையாக நடமாடுகிறது.

ஈழத்திருநாட்டின் மக்கள் கலைஞர்களே! நமது கலை எது? நாம் எந்தக் கலையின் பாதுகாவலர்கள்?

நிச்சயமாகவே, நாம் அடிமைக் கலையின் பக்கமல்ல, சுதந்திரத் தீபஸ்தம்பம் ஏற்றும் திவ்ய கலைப்பக்கம். அழிவுக் கலைப்பக்கமல்ல. ஆக்கக்கலைப்பக்கம். சுகபோகிகளின் கலைப் பக்கமல்ல; சோறின்றி ஓலமிடும் அப்பாவி ஏழை மக்களின் கலைப் பக்கம்.

மக்கள் கலைப் பெருமன்றம், நமது இதய ஒலியின் இலட்சியப் பாதையின் தோற்றமாகும். இந்த லட்சியப் பாதையில் துரிதமாக முன்னேறத் துணை தாரீர், உதவி நல்கவாரீர் என ஈழத்து மக்கள் கலைஞர்கள் அனைவரையும் வேண்டிக் கொள்கிறோம்.

---

## கலைஞர்களே இசையாளர் சங்கக் கோரிக்கைககு ஆதரவாக ஒன்றுபடுங்கள்

இந்தியாவிலிருந்து வியாபார நோக்கத்திற்காக இசையாளர்களைக் கொண்டுவந்து, இலங்கைக் கலைஞர்களுடைய வயிற்றிலடித்து, பணத்தைக் கள்ளத்தனமாகக் கடத்திச் செல்லும் பாதகச்செயலுக்கெதிராக உடனே நடவடிக்கை எடுக்கவேண்டுமென இலங்கை இசையாளர் சங்கம் அரசாங்கத்திற்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. கலை என்ற பெயரில் நடத்தப்படும் இம்மோசடிகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டுமென்று அரசாங்கத்தை மக்கள் கலைப் பெருமன்றம் வேண்டுவதோடு, இசையாளர்கள் சங்கக் கோரிக்கைகள் போன்ற நியாயமான கோரிக்கைகளின் பக்கம் மக்கள் சக்தியைத் திருப்புவதற்கு மக்கள் கலைப் பெருமன்றம் கலைஞர்களின் கட்டுக்கோப்பான ஸ்தாபனமாக உருவகப் படுத்த ஒன்றுபடுமாறு கலைஞர்களை அறைகூவி அழைக்கிறது.

கலைஞர்களின் கோரிக்கைகளைப் பெறுவதற்கு மக்கள் கலைப்பெருமன்றத்தைப் பலப்படுத்துவோம்.

<u>நடத்த விருப்பவை</u>

## இலட்சியக் கண்கள்

மக்கள் கலைப்பெருமன்றத்தில் அங்கம் வகிக்கும் செஞ்சுடர் கலாமன்றத்தின் முதல் தயாரிப்பான "இலட்சியக் கண்கள்" என்னும் நாடகம் ஏப்ரல் மாதம் கொழும்பில் அரங்கேற்றப்படும்.

இதன் கதைவசனத்தை கரவை கந்தசாமிஎழுதியுள்ளார். டைரக்ஷன் பொறுப்பை டி. கலைதாதசனும் இசை அமைப்பை போல் மாணிக்கம் குழுவினரும் அளிக்கின்றனர்.

இதில் கலைதாசன் ஸ்தனிஸ், செல்வி ராஜமணி, K. R. சரத சந்திரதாஸ், சுகந்தன், சிவப்பிரசாத் மற்றும்பலரும் நடிக்கின்றனர்.

நிர்வாகப் பொறுப்பை சுகந்தன், ஸ்தனிஸ் இருவரும் ஏற்றுள்ளனர்.

## "காதல் ரதம்"

விவேகானந்த நாடகமன்றம் அளிக்கும் காதல் ரதம்.

கதைவசனம் டைரக்ஷன் பொறுப்பை R. மணிவாசகம், P. S. ராசன் இருவரும் ஏற்றுள்ளனர்.

இதில் முக்கிய பாகங்களில் வைத்திலிங்கம் கலைதாசன், ரகுமான் முத்துராமன் K. R. சரத்சந்திரதாஸ் ஜெயகௌரி, ராதாமணி ஆகியோரும் இன்னும் பலரும் பங்குபற்றுகின்றனர். இந்த நாடகம் ஏப்ரல் இரண்டாவது வாரத்தில் கொழும்பில் அரங்கேற்றப்படும்.

---

## முகவரி மாற்றம்

எனக்கும் மரகதத்திற்கும் அனுப்பப்படும் கடிதங்கள், மணி ஓடர்கள், விஷயதானங்கள் முதலியவைகளை கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

இளங்கீரன்
**மரகதம்**
**26, சென்ற். அந்தோனி மாவத்தை**
**கொழும்பு—13.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனையாகிறது!

★ ★

நீர்வை பொன்னையன் பி. ஏ.

எழுதிய

# மேடும் பள்ளமும்

(சிறுதைத் தொகுதி)




விலை ரூ. 2-00 (தபால் செலவு தனி)

**இது ஒரு மக்கள் பிரசுராலய வெளியீடு**

**PEOPLE'S PUBLISHING HOUSE,**
**249, First Division, Maradana,**
**COLMBO-10.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Rgd at the G. P. O as a News paper.


ஸி. டப்ளியு. ஈ. யின்


வனப்புமிக்க


மின்சார ஒளி


உபகரணங்களால்

உங்கள் இல்லங்களை

அலங்கரியுங்கள்







மேற்கு ஜெர்மனியிலிருந்து இறக்குமதி செய்யப்படும் இந்த அலங்காரமான மின்சார ஒளி உபகரணங்கள் உங்கள் இல்லங்களை கவர்ச்சிகரமாக்குவதுடன் மிகக் குறைந்த செலவில் மிக உயர்ந்த ஒளிச் சாதனங்களை நீங்கள் ஒவ்வொருவரும் பெறக்கூடிய வாய்ப்பைத் தருகின்றன.

விசாரணைகளுக்கு:—

மனேஜர், ரேடியோ பகுதி, 131, வெக்ஸால் வீதி, கும்பனித் தெரு, போன்: 79702

கிடைக்குமிடம்:—

ஸி. ஈ. டப்ளியு. ஈ. ரேடியோப் பகுதி
85, மெயின் வீதி, கொழும்பு.

ஸி. டப்ளியு. ஈ. ஷாப்பு
21, குமார வீதி, கொழும்பு.


இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினால், 26, சென்ற் அந்தோனி மாவத்தை, கொழும்பு 13. — சித்ரா பிரிண்டில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org